செ.வெ.எண்:390/2009(செமதொஅ) நாள். 11.11.2009

**மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான இலவச பயிற்சியில் சேர ஊனமுற்றோர் தேசிய அடையாள அட்டை மற்றும் குடும்ப அட்டையுடன் நேரில் வருமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.**

மனவளர்ச்சி குன்றிய 14 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கான பயிற்சி நிலையம் தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், மேல்மருவத்தூர் அடுத்துள்ள அகிலி கிராமத்தில் விரைவில் தொடங்கப்பட உள்ளது. 14 முதல் 30 வயதுக்கு உட்பட்ட லேசான மற்றும் மிதமான, மனவளர்ச்சி குன்றிய பெண்கள் இந்த பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். பயிற்சியில் சேருபவர்களுக்கு நாற்றங்கால் தயாரித்தல் மற்றும் மெழுகுவர்த்தி தயாரித்தல் போன்ற தொழில்களில் இலவச பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி காலத்தில் உணவு, தங்குமிடம் இலவசமாக அளிக்கப்படுகிறது.

மேற்கண்ட பயிற்சியில் சேர விருப்பமும், தகுதியும் உடைய பெண்கள் ஊனமுற்றோர் தேசிய அடையாள அட்டை மற்றும் குடும்ப அட்டை ஆகியவற்றுடன் 18.11.2009 காலை 10.00 மணிக்கு மாவட்ட மறுவாழ்வு மையம், ஜி.எஸ்.டி சாலை, (நீதிமன்றம் அருகில்) செங்கல்பட்டு-603 001 (தொலைபேசி எண்.27431853) என்ற முகவரியில் நடைபெற இருக்கும் நேர்முக தேர்வில் கலந்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்